# லா பாஸ், பொலிவியாவில் நடைபெற்ற முதலாவது இந்தியா-பொலிவியா இடையிலான வெளியுறவு அலுவலக ஆலோசனை கூட்டம்

**நவம்பர் 21, 2014**

இந்திய குடியரசு மற்றும் பல நாட்டு மக்கள் இருக்கும் பொலிவியா நாட்டிற்கும் இடையிலான முதலாவது வெளியுறவு அலுவலக ஆலோசனை கூட்டம் கடந்த 20 நவம்பர் 2014 அன்று லா பாஸ் நகரில் நடைபெற்றது. இந்திய தூதுக்குழுவினை இந்திய வெளியுறவு அமைச்சின் ஸ்ரீ ர. சுவாமிநாதன், சிறப்புச் செயலாளர் (அமெரிக்கா மற்றும் CPV) அவர்களும், பொலிவிய பிரதிநிதிகளினை திரு ஜுவான் கார்லோஸ் அலுரால்டெ டெஜடா ,பொலிவியா வெளியுறவு துணை அமைச்சர் அவர்களின் தலைமையிலும் நடந்தது.

பேச்சுவார்த்தைகள் ஒரு சுமூகமான சூழ்நிலையில் நடைபெற்றதோடு, அரசியல், வணிக, முதலீடு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளிட்ட இருதரப்பு உறவுகள் குறித்து முழு அளவிலாக பேசப்பட்டது. இரண்டு தரப்பும் அவர்களின் தற்போதைய உறவு நிலை, குறிப்பாக பொருளாதார வகையில், பெரிய வாக்குறுதி அளித்தாலும், இது உண்மையான திறனை பிரதிபலிக்க வில்லை என்பதை ஒப்புக் கொண்டனர். அவர்கள் இந்த திறனை உணர வழி பற்றியும் அதில் உள்ள தடைகளை நீக்கவும் இணைந்து பணி செய்ய ஒப்பு கொண்டனர். முடிந்தவரையிலான ஒத்துழைப்பு குறித்த புதிய பகுதிகளில் பல அடையாளம் கானப்பட்டன.

இரு தரப்பும் மேலும் பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் பற்றிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மேலும் , ஸ்ரீ சுவாமிநாதன் அதிமேதகு திரு டேவிட் சொக்வஹுவன்கா, பொலிவியா வெளியுறவு அமைச்சர் அவர்களையும் சந்தித்தார்.

இரு தரப்பு பிரதிநிதிகளின் தலைவர்களும் முதலாவது வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை நடத்தியது குறித்து திருப்தி தெரிவித்துள்ளனர் மற்றும் பரஸ்பர வசதியான தேதியில் புது தில்லியில், அடுத்த சுற்று கூட்டத்தினை நடத்த ஒப்பு கொண்டனர்.

**லா பாஸ்**

**நவம்பர் 20, 2014**